முல்லைப்பாட்டில் சூழலியல்

திருமதி. ஆ.பத்மாவதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220394

ஆய்வுச்சுருக்கம்
பண்டைய தமிழகத்தின் ஐந்திணைகளில் ஒன்றான முல்லை நிலம் காடும் காடுசார்ந்த இடங்களும் ஆகும். செம்மண் பரப்பைக்கொண்ட இப்பகுதியில் முல்லைப் புக்கள் அதிகமாகக் காணப்படுவதால் இப்பெயர் பெற்றது. ஆயர்கள் ஆடு மாடுகளை மேய்த்துவரகு, தினை பயிரிட்டு வாழ்ந்தனர். கார்காலம் (பெரும்பொழுது) மற்றும் மாலை (சிறுபொழுது விரிச்சிகேட்டல் இந்நிலத்திற்கு உரியவை ஆகும்.

ஆய்வு முன்னுரை

முல்லைப் பாட்டில் சூழலியல் ஆய்வு என்பது காடு விலங்குகள் தாவரங்கள் மற்றும் ஆயர் மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட சங்க இக்கியக் கட்டுரையாகும். இது திணை சார்ந்த நில அமைப்பையும் நட்புதனாரின் சொற் சித்திரங்களையும் சுற்றுசூழல் நோக்கில் ஆராய்கிறது.

சூழலியல் விளக்கம்

சூழலியல் என்பது தவரங்கள், விலங்குகள் அடங்கிய அனைத்து உயிரினங்களுடன், தொடர்பு கொண்டிருக்கும் இயற்பியல் கூறுகளையும் அடக்கியதாகும். இவற்றிற்கிடையே நடைபெறும் தொடர்புகள், பரிமாற்றங்கள். எவ்வாறு நடைபெறுகிறது. என்பதனைக் கூறுவது சூழலியல் ஆகும். இயற்கைச் சூழல், கடல், மலை, காடு ஆகியவை சிலருக்கு நேரடியாக அதாவது விருப்பக் கூறுகளாக அமைய, நிலம், நீர் ஆகிய இரண்டு எல்லோருக்கும் உரிய அடிப்படைக் கூறுகளாக அமையும். மேலும் நிலத்தொடு தொடர்புடையது மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலியனவும் அடிப்படைக் கூறுகளே. அவை எப்படியெல்லாம் மனித வாழ்வுக்கு உதவுகின்றன. மனித வாழ்வைப் பாதிக்கின்றன என்ற புதிய ஆய்வுத் துறையே சுற்றுச்சூழலில் (நுஉழடழபல) என்று அழைக்கப்படுகிறது.

கார்காலம்

முல்லைப் பாட்டில் கார்காலம் (ஆவணி, புரட்டாசி) கருப்பொருளாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் மழை மேகங்கள் கடல் நீரைப்பருகி, பொன் உருகக் காய்ந்து, மண் உருகப் பெருமழை பொழியும் சூழலை விவரிக்கிறது.

"நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செலநிமிர்ந்தமாஅல் போல
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, உவன் ஏற்பு,
கோடுகொண்டுஎழுந்தகொடுஞ்செலவு
எழிலி? (முல்லை 1-5)

முகிலானது அகன்ற இடத்தையுடைய உலகத்தை வளைத்து சங்கும். சக்கரமும் ஆகிய குறிகளை அணைத்தவனுமாகிய வலிமையானகையை உடையவனும், மாபலிச்சக்கரவர்த்திதன் கையிலே நீர் ஊற்றிய பொழுது விண்ணளவு உயர்ந்தவனுமாகிய திருமாலைப் போல், ஒலி முழங்குகின்ற குளிர்ச்சி உடைய கடல் நீரைப் பருகி மழை பொழிகின்ற காட்சியை முல்லைத் திணை கூறுகிறது.

மாலைப்பொழுது

முல்லைப் பாட்டின் சிறுபொழுது மாலைப்பொழுது ஆகும். சிறு கயிறு கொண்டு

கட்டப்பட்ட இளங்கன்றுகள் மாலைப்பொழுது ஆகியும் மனை திரும்பாததன் தாய்ப் பசுவை நினைத்து அம்மா! அம்மா! என்று அலறுகிறது

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
ஒடுங்குசவல் அகைந்தகையன்

(முல்லை12.14)

அங்கனமே முல்லை நிலத் தலைவிக்கு அந்த மாலை நேரம் தலைவனைக் காணாமல் வாட்டுகிறது.

முல்லை நில எழில்

முல்லை நிலத்து நுண்ணிய மணலில் நெருங்கிய இலைகளைக் கொண்டகாயா மலர், மைபோல் மலர்ந்திருக்கவும், தளிரையும் புங்கொத்துக்களையும் உடைய கொன்றை பொன் போன்ற மலர்களைச் சொரியவும், காந்தளின் குவிந்த மொட்டுகள் அழகிய கை போல புத்திருக்கவும் காடு செழித்திருக்கும்

"செறி இலைக் காயாஅஞ்சனம் மலர,
முறி இணர்க் கொன்றை நன் பொன்கால
கோடல் குவி முகை அங்கை அவிழ

(முல்லை:93-95)

முல்லை நிலத்தில் விளைந்த வளைந்த கதிரினையுடைய வரகினூடே முறுக்கிய கொழுப்புகளை உடைய ஆண் மானுடன் பெண் மான் துள்ளிக் குதித்துவிளையாடுகின்ற அழகினை முல்லைப்பாட்டு எடுத்துரைக்கிறது.

முல்லை மலர்

தமிழ் இலக்கியங்களில், குறிப்பாகச் சங்க இலக்கியத்தில் முல்லை மலர் கற்புநெறி, காதலின் ஆழம், மற்றும் பிரிவாற்றாமைக்கு அடையாளமாகத்திகழ்கிறது. கார்காலத்தில் முல்லைப்பு அதியமாக புக்கும் தன்மையைக் கொண்டது. சங்க இலக்கியக்கியங்களில் முல்லை மலர் தலைவனோடு இணைந்திருக்கும் போது சூடும் மலராகவும், கார்காலத்தைத் தவைனுக்கு அறிவித்துத் தலைவியின் நினைவைக் கூட்டும் மலராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

"முல்லை சான்ற கற்பின்"

(சிறுபாணற்றுப்படை-30)

என்ற அடி முல்லைமலர் கற்பு நெறிக்கு அடையாளமாகத் நிகழ்வதை உணர்த்துகிறது.

செம்மண் நிலப்பரப்பு

முல்லை. நிலத்தின் செம்மண் நிலப்பரப்பில் மழை பெய்த பின் விரைந்து ஓடும் வெள்ளம் நிலத்தில் வரி வரியாகச் செய்துவிடுகிறது. வழியில் ஆங்காங்கே சேர்ந்திடும் செந்நில ஈர மண்ணைக் காட்டுக்கோழிகள் காலால் கிளறிச் சிதறுகின்றன. பசுக்களோடு தலைமை தாங்கி வரும் காளை வழியில் கண்ட செம்மண்புற்று மணலைதன் கொம்புகளால் குத்துகிறது.

"கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
விடுநெறி ஈர்மணல் வாரணம் சிதறப்
பாம்பு முறை புற்றத்து ஈர்ம்புறம் குத்தி
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏ எறு

(அகம்-64)

ஒரு நாள் இரவில் பெருமழை பெய்தது நன்றாகப் புலர்ந்த காலைப் பொழுதில் எல்லோரும் தம் தம் நிலங்களில் ஏர்புட்டி உழுதனர். அந்த செம்மண் நிலத்தும் புழுதி கீழ் மேலாக மாறிடுமாறு உழுதனர். ஏர் உழுத பின்பிளந்து செல்லப்பட்ட செந்நிறமான ஊணைக் கிழித்துச் சென்றது போல் இருந்தது.

பேருறைதலை இயபெரும்புலர் வைகறை
ஏர் இடம் படுத்த இருமறுப் புழிப்
புறமாறு பெற்ற புவல் ஈரத்து - அகம் - 194

உழுத நிலத்தில் வரகு விதைக்கப்பட்டது. அந்த வரகு நன்றாக விளைந்த பிறகு மயில் அதனை உண்ணவரும். இயற்கை முல்லை நிலமக்களுக்கு ஒரு வரமாக இருந்தது.

விரிச்சி கேட்டல்

முல்லை நில மக்கள் மாலை நேரத்தில் அன்பு, அறம், அருள் அறிவுடைமையாலும் பெரியவர்களான மகளிர் சிலர் இனி நடக்க இருப்பதை அறியும் வேட்கை மிக்கவராய், நாழியில் கொண்டு வந்த நெல்லையும்,

யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
தாழிகொண்டநறுவீமுல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுதுபெண்டிர் விரிச்சிநிற்ப
(முல்லை7-11)

வண்டுகள் வந்து மொய்க்க அரும்பவிழ்ந்து மலர்ந்து மணம் நாறும் புத்தம் புது மலர்களையும் வழிபடு தெய்வங்களுக்குத் தூவி. அத்தெய்வ அருள் வாக்கை எதிர் ரோக்கி இருந்தனர்

முடிவுரை

கார்காலத்தின் வருகையைச் சூழலியல் மாற்றங்களாகப் பாட்டு விவரிக்கிறது. முல்லை, குருந்து, கொன்றை போன்ற காட்டின் இயற்கைத் தாவரங்கள். மற்றும் செடி கொடிகளின் உளம் விரிக்கப்பட்டுள்ளன. முல்லை நில மக்களின் பொருளாதாரம், வாழ்க்கை முறை இயற்கையோடு இயைந்த சூழலியல் வாழ்வியலை உணர்த்துகிறது

துணை நூற்பட்டியல்

1. சங்கத் தமிழர் வாழ்வியல் : தா.நீலகண்ட பிள்ளை, செம்மூதாய் பதிப்பகம், சென்னை
2. முல்லை (முல்லைப்பாட்டுஒருவளக்கம்): புலவர் காகோவிந்தன், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த கழகம்,
3. முல்லைத்திணை : மு.வரதராசனார், சாது அச்சுக்கூடம்,சென்னை-18
4. சூழல் அறம்: நியு செஞ்சுரி புக் ஹவுல் சிட்கோ இண்டஸ்டியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை